பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

15 07 2024 7 15
திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. சமூக வலைதளத்தில் ஆர்வத்துடன் செயல்படுவதில் மகிழ்ச்சி அடைவதாகவும் எதிர்காலத்திலும் இதேபோன்ற செயல்பாடுகளை விரும்புவதாகவும் பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. அனைத்து தரப்பு மக்களின் நலன்களையும் கருத்தில் கொண்டு பிஜேபி செயல்படுவதாக அக்கட்சியின் தலைவரும், மத்திய அமைச்சருமான திரு. ஜேபி. நட்டா தெரிவித்துள்ளார்.

3. நாட்டில் கடந்த 10 ஆண்டுகளில் 469 புதிய விமான வழித்தடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக மத்திய சிவில் விமானப் போக்குவரத்துத் துறை இணையமைச்சர் திரு முரளிதர் மோஹல் கூறியுள்ளார்.

4. நேபாளத்தின் புதிய பிரதமராக, நேபாள கம்யூனிஸ்ட் ஐக்கிய மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் கட்சியின் தலைவர் திரு கேபி. சர்மா ஒலி இன்று பதவியேற்கவுள்ளார்.

5. யூரோ கோப்பை கால்பந்து போட்டியில் இங்கிலாந்தை வீழ்த்தி ஸ்பெயின் அணி பட்டம் வென்றது.

*---- இனி விரிவான செய்திகள் ---*

<<<<>>>>

பிரதமர் நரேந்திர மோடியை எக்ஸ் சமூக வலைதளத்தில் பின் தொடர்பவர்கள் எண்ணிக்கை 10 கோடியைக் கடந்துள்ளது.

இதன் மூலம் எக்ஸ் சமூக வலை தளத்தில் உலகிலேயே அதிக மக்கள் பின்தொடரும் தலைவர் என்ற பெருமையைப் பிரதமர் பெற்றுள்ளார்.

இந்த சாதனை மகிழ்ச்சி அளிப்பதாக பிரதமர் தெரிவித்துள்ளார்.

இந்த சமூக வலைதளத்தில் துடிப்பாக செயல்படுவதில் மகிழ்ச்சி அடைவதாகவும் எதிர்காலத்திலும் இதேபோன்ற செயல்பாடுகளை விரும்புவதாகவும் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

10 கோடி பின்தொடர்பவர்களை கடந்ததற்காக பிரதமருக்கு மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் மட்டுமல்லாமல் உலக அரங்கில் திரு நரேந்திர மோடியின் புகழுக்கு இது ஒரு சான்றாக விளங்குகிறது என்று திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

அனைத்து தரப்பு மக்களின் நலன்களையும் கருத்தில் கொண்டு பிஜேபி செயல்படுவதாக அக்கட்சியின் தலைவரும், மத்திய அமைச்சருமான திரு. ஜே.பி. நட்டா தெரிவித்துள்ளார்.

உத்தரப்பிரதேச மாநிலம் லக்னோவில் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் பேசிய அவர், தற்போதைய நலன்களையும், எதிர்கால நலன்களையும் கருத்தில்கொண்டே பிஜேபி தலைமையிலான அரசு செயல்படுவதாகத் தெரிவித்தார்.

2047ஆம் ஆண்டில் வளர்ச்சியடைந்த இந்தியா என்பதே பிஜேபியின் இலக்கு என்று அவர் கூறினார்.

அண்மையில் நடைபெற்ற மக்களவைத் தேர்தலில் மக்களின் நம்பிக்கையை பிஜேபி பெற்றுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அரசியல் சாசனத்தை மதிக்காமல் செயல்பட்டது காங்கிரஸ் கட்சிதான் என்றும் திரு. ஜேபி. நட்டா குற்றம் சாட்டினார்.

<<<<>>>>

நாட்டின் வளர்ச்சியில் வெளிநாடு வாழ் இந்தியர்கள் முக்கிய பங்காற்றுவதாக மக்களவைத் தலைவர் திரு ஓம் பிர்லா கூறியுள்ளார்.

ரஷ்யாவின் மாஸ்கோவில் இந்திய சமூகத்தினரிடையே பேசிய அவர், ரஷ்யாவில் உள்ள இந்திய சமூகத்தினர் இரு நாடுகளின் நல்லுறவு மற்றும் கலாச்சாரப் பரிவர்த்தனைக்குப் பாலமாகத் திகழ்வதாகக் குறிப்பிட்டார்.

<<<<>>>>

சுவிட்சர்லாந்து சென்றுள்ள வர்த்தக அமைச்சர் திரு. பியூஷ் கோயல் பல்வேறு சர்வதேச அமைப்புகளின் பிரதிநிதிகளுடன் வர்த்தகத்தை வலுப்படுத்துவது குறித்து பேச்சு நடத்தினார்.

உலக வர்த்தக அமைப்பின் தலைமை இயக்குநருடன் அவர் ஆலோசனை மேற்கொண்டார்.

இந்தியாவில் முதலீட்டுக்கான வாய்ப்புகளை விரிவாக அவரிடம் எடுத்துரைத்தாக சமூக வலைதளத்தில் திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

ஸூரிச் நகரில் உள்ள இந்திய சமூகத்தினருடன் அவர் கலந்துரையாடினார்.

<<<<>>>>

நாட்டில் கடந்த 10 ஆண்டுகளில் 469 புதிய விமான வழித்தடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக மத்திய சிவில் விமானப் போக்குவரத்துத் துறை இணையமைச்சர் திரு முரளிதர் மோஹல் கூறியுள்ளார்.

புனே விமான நிலையத்தின் புதிய முனையத்தில் ஆய்வு மேற்கொண்ட பின் பேசிய அவர், விமானப் போக்குவரத்துத் துறையில் கடந்த 10 ஆண்டுகளில் இந்தியா பெரிய முன்னேற்றம் கண்டுள்ளது என்றார்.

தில்லி, பெங்களூர், உள்ளிட்ட பல நகரங்களில் உள்ள விமான நிலையங்களில் புதிய முனையங்கள் கட்டப்பட்டுள்ளன என்று அவர் கூறினார்.

நவி மும்பை சர்வதேச விமான நிலையம் அடுத்த ஆண்டு மாதம் மார்ச் முதல் செயல்பாட்டுக்கு வரும் என்று திரு முரளிதர் மோஹல் தெரிவித்தார்.

<<<<>>>>

லடாக் பகுதியின் மேம்பாட்டைக் கருத்தில் கொண்டு அப்பகுதியில் அதிக வளர்ச்சித் திட்டங்களை மத்திய அரசு செயல்படுத்துவதாக மத்திய நாடாளுமன்ற விவகாரங்கள் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு கூறியுள்ளார்.

கார்கிலில் நடைபெற்ற தேசிய சிறுபான்மையினர் மேம்பாட்டுக் கழகத்தின் பயனாளிகள் கலந்துரையாடல் நிகழ்ச்சியில் அவர் பங்கேற்றார்.

சிறுபான்மை சமூகங்களின் கலாச்சார பாரம்பரியத்தை மேம்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் கார்கிலில் ஒரு கலாச்சார மையம் நிறுவப்படுவதாக அமைச்சர் கூறினார்.

<<<<>>>>

நேபாளத்தின் புதிய பிரதமராக, நேபாள கம்யூனிஸ்ட் ஐக்கிய மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் கட்சியின் தலைவர் திரு கே.பி.சர்மா ஒலி இன்று பதவியேற்கவுள்ளார்.

அந்நாட்டு நாடாளுமன்றத்தில் நடைபெற்ற நம்பிக்கை வாக்கெடுப்பில் திரு புஷ்ப கமல் தஹால் பிரசந்தா தோல்வி அடைந்த நிலையில் புதிய அரசு அமைக்க, அதிபரிடம் திரு சர்மா ஒலி உரிமை கோரினார்.

இதையடுத்து அந்நாட்டு அதிபர் திரு ராம் சந்திர பவுடல், திரு சர்மா ஒலிக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

திரு சர்மா ஒலிக்கும் அவரது அமைச்சரவைக்கும் இன்று காலை நடைபெறும் பதவியேற்பு விழாவில் அந்நாட்டு அதிபர் பதவிப் பிரமாணம் செய்து வைக்கவுள்ளார்.

திரு ஷேர் பகதூர் தியூபாவின் நேபாள காங்கிரஸ் ஆதரவுடன் அடுத்த பிரதமராக திரு சர்மா ஒலி பதவியேற்கிறார்.

<<<<>>>>

கர்நாடக சட்டப்பேரவையின் மழைக்காலக் கூட்டத்தொடர் இன்று தொடங்குகிறது.

10 நாட்களுக்கு இந்தக் கூட்டத்தொடர் நடைபெற உள்ளது.

இதில் பல்வேறு துறைகளின் மானியக் கோரிக்கைகள் தாக்கல் செய்யப்பட்டு அவற்றின் மீது விவாதம் நடைபெற உள்ளது.

பழங்குடியினர் வளர்ச்சிக் கழகத்தில் முறைகேடுகள் நடைபெற்றதாக கூறப்படுவது, மைசூரு நகர்ப்புற மேம்பாட்டு ஆணையத்தில் வீடுகள் ஒதுக்கீட்டில் முறைகேடு போன்ற பிரச்சினைகள் குறித்து எதிர்க்கட்சிகள் இக்கூட்டத்தொடரில் பிரச்சினையை எழுப்ப திட்டமிட்டுள்ளன.

<<<<>>>>

காவிரியில் தமிழகத்திற்கு 8 ஆயிரம் கன அடி நீர் மட்டுமே திறக்கப்படும் என கர்நாடாக முதலமைச்சர் திரு. சித்தராமைய தெரிவித்துள்ளார்.

தமிழகத்திற்கு 20 நாட்களுக்கு தினமும் ஒரு டி.எம்.சி. தண்ணீரை திறக்க வேண்டும் என காவிரி ஒழுங்காற்றுக் குழு பரிந்துரை செய்திருந்தது.

இதுகுறித்து விவாதிக்க கர்நாடக அரசு பெங்களூருவில் நேற்று அனைத்துக் கட்சிக் கூட்டத்தை நடத்தியது.

இக்கூட்டத்திற்குப் பின் செய்தியாளர்களிடம் பேசிய அம்மாநில முதலமைச்சர் திரு. சித்தராமையா, காவிரி ஒழுங்காற்றுக் குழுவின் பரிந்துரைக்கு எதிராக மேல்முறையீடு செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

கர்நாடகா அணைகளில் தற்போது 63 சதவீத தண்ணீர் மட்டுமே உள்ளதாக அவர் கூறினார்.

காவிரி ஒழுங்காற்றுக் குழுவின் பரிந்துரைப்படி ஒரு டி.எம்.சி. தண்ணீர் திறக்க முடியாது எனவும், தமிழகத்திற்கு 8 ஆயிரம் கன அடி நீர் மட்டுமே திறக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

போதுமான அளவு மழை பெய்யாவிட்டால் தமிழகத்திற்கு திறக்கப்படும் தண்ணீரின் அளவு குறைக்கப்படும் என்றும் திரு. சித்தராமையா தெரிவித்தார்.

<<<<>>>>

மத்திய அரசு செயல்படுத்தும் திட்டங்களின் பயன்கள் தமிழக மக்களை சென்றடையக்கூடாது என்ற உள்நோக்கத்துடன் திமுக அரசு செயல்படுவதாக பிஜேபி மாநில தலைவர் திரு. அண்ணாமலை குற்றம் சாட்டியுள்ளார்.

திருச்சியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், பிரதமரின் விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவு திட்டத்தில் தொடக்கத்தில் தமிழகத்தில் 43 லட்சம் விவசாயிகள் பயன் பெற்றதாகக் கூறினார்.

தற்போது 23 லட்சம் பேர் மட்டுமே பயன் பெறுவதாக அவர் தெரிவித்தார்.

எஞ்சியுள்ள விவசாயிகள் ஏன் விடுபட்டார்கள் என அவர் கேள்வி எழுப்பினார்.

விவசாயிகளுக்கான சிறப்பு குறைதீர்க்கும் முகாமை நடத்தி இதனை மாநில அரசு சரிசெய்ய வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

ஒரே கூட்டணியில் உள்ள சூழலில் காவரிப் பிரச்சினை தொடர்பாக கர்நாடக முதலமைச்சர் திரு. சித்தராமையாவிடம் இதுகுறித்து திமுக அரசு ஏன் பேசவில்லை என அவர் கேள்வி எழுப்பினார்.

மத்திய அரசின் மீது குற்றம் சாட்டுவதையே குறிக்கோளாகக் கொண்டு திமுக செயல்படுவதாக திரு. அண்ணாமலை குற்றம் சாட்டினார்.

<<<<>>>>

ஜம்மு-கஷ்மீர், குப்வாரா மாவட்டத்தில் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டுப் பகுதியில் ஊடுருவல் முயற்சி முறியடிக்கப்பட்டது.

இந்த ஊடுருவல் தடுப்பு நடவடிக்கையின் போது மூன்று தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாக பாதுகாப்புத்துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அவர்களிடமிருந்து ஆயுதங்கள் மற்றும் வெடிபொருட்கள் கைப்பற்றப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

இளநிலை பட்டப்படிப்புகளில் மாணவர் சேர்க்கைக்கான பொது பல்கலைக்கழக நுழைவுத் தேர்வான CUET தேர்வில் பாதிக்கப்பட்டதாகக் கூறப்படும் ஆயிரம் பேருக்கு வரும் 19ஆம் தேதி மறுதேர்வு நடைபெறும் என தேசிய தேர்வு முகமை அறிவித்துள்ளது.

ஏற்கனவே நடைபெற்ற தேர்வில் மாணவர்கள் தேர்ந்தெடுத்த மொழிக்குப் பதிலாக வேறு மொழியில் வினாத்தாள்கள் வழங்கப்பட்டதால் நேர இழப்பு ஏற்பட்டதாக புகார்கள் எழுந்தன.

இதையடுத்து பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு மறுதேர்வு நடத்தும் அறிவிப்பை தேசிய தேர்வு முகமை வெளியிட்டுள்ளது.

<<<<>>>>

நாட்டின் பல்வேறு பகுதிகளில் அடுத்த 4 நாட்களுக்கு கனமழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கோவா, மகாராஷ்டிரா, குஜராத், தெற்கு கர்நாடகா ஆகிய பகுதிகளில் அதிகனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக அந்த மையம் தெரிவித்துள்ளது.

தெலங்கானா, மத்தியப்பிரதேசம், சத்தீஸ்கர் ஆகிய மாநிலங்களின் சில இடங்களில் கனமழை பெய்யக்கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே கேரளாவில் மலப்புரம், கன்னூர், எர்ணாகுளம், காசர்கோடு ஆகிய மாவட்டங்களுக்கு இன்று அதிகனமழைக்கான சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த மாவட்டங்களில் பள்ளி, கல்லூரிகளுக்கு இன்று விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

யூரோ கோப்பை கால்பந்து போட்டியில் இங்கிலாந்தை வீழ்த்தி ஸ்பெயின் அணி பட்டம் வென்றது.

பெர்லினில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் ஸ்பெயின் அணி, 2-1 என்ற கோல் கணக்கில் இங்கிலாந்தை வென்று கோப்பையை கைப்பற்றியது.

---------------

ஜிம்பாப்வேக்கு எதிரான 5வது மற்றும் கடைசி ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா 42 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

ஹராரேயில் நடைபெற்ற இப்போட்டியில், முதலில் பேட் செய்த இந்தியா, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 167 ரன் எடுத்தது.

168 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் விளையாடிய ஜிம்பாப்வே 18 புள்ளி 3 ஓவரில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 125 ரன் மட்டுமே எடுத்து தோல்வியடைந்தது.

இதன் மூலம் 4-1 என்ற கணக்கில் இந்தியா தொடரை வென்றது.

---------------

தமிழ்நாடு ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் திருச்சி அணி 35 ரன் வித்தியாசத்தில் சேலம் அணியை வென்றது. இன்றைய ஆட்டத்தில் மதுரை அணி – நெல்லை அணியை எதிர்கொள்கிறது.

**<<<<The End>>>>**